# இலங்கையின் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்கள் காட்டும் இந்து மதம்

சி. க. சிற்றம்பலம்
வரலாற்றுத்துறை
இலங்கைப் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாண வளாகம்

கி. மு. 3ம் நூற்றுண்டு தொடக்கம் காணப்படும் பிராமி மொழிக் கல்வெட்டுக்களே இந்நாட்டின் மிகப்பழைய கல்வெட்டுக்களாகும். ஆயிரக்கணக்கான இவை நாட்டின் பல பாகங்களிலும் சிதறிக் காணப்படுகின்றன.[1] இவை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வரிகள் கொண்ட மிகச்சிறிய கல்வெட்டுக்களாகும். அத்துடன் இவை பௌத்த குருமாருக்குக் கொடுக்கப்பட்ட தானத்தையும் அதை வழங்கியவர்கள் பெயரையும் கூறுகின்றன. இவ்விதம் பௌத்த மதச் சாயலுடைய இவை பௌத்தமல்லாத ஏனைய மதங்களைப்பற்றி நேரடியாக எதையும் கூறவில்லை. இருந்தும் பௌத்த சங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட தானத்தை வழங்கியவர்களின் பெயர்ப்பட்டியலை நோக்கும்போது அவர்கள் ஒருகால் இந்து மதத்தைத் தழுவியிருந்தார்கள் என்ற உண்மை வெளிப்படுகிறது. இதே நேரத்தில் இத்தானத்தை வழங்கியவர்கள் எல்லோரும் பௌத்தர்களாக மட்டும்தான் இருந்தனர் என்று எண்ணுதல் தவறு. சமரசமும் சமயக் காழ்ப்பு உணர்ச்சியுமற்ற அக்காலத்தில் ஒரு மதத்தவர் மற்றைய மதப் பிரிவுகளுக்குத் தானம் வழங்கப் பின்நிற்கவில்லை என்பதனை எடுத்துக்காட்டப் போதிய வரலாற்றுச் சான்றுகள் உள. துர் அதிஷ்டவசமாக இக்கால இலக்கியச் சான்றுகளாகிய மகாவம்சம் போன்ற நூல்கள் கல்வெட்டுச் சான்றுகளை விரிவுபடுத்துவதில் பெரிதும் உதவவில்லை. காரணம் பௌத்த சங்கத்தின் வரலாற்றினைக் கூறும் நோக்கமாகவே இந்நூல் எழுதப்பட்டது என்பதனை இந் நூலாசிரியரே வெளிப்படையாகக் கூறியிருப்பதால் பௌத்தமல்லாத ஏனைய மதங்களைப் பற்றிய விவரத்தை விரிவாகக் கூறுவதில் அவர் ஆர்வங் காட்டவில்லை. இக்கால இந்து சமயக் கட்டிடங்களான தொல்பொருளியற் சான்றுகளும் மிகமிக அருகியே காணப்படுகின்றன. இதற்குக் காரணம் இக்காலத்தைய இந்து மதக் கட்டிடங்களும் அழியும் பொருட்களாலேயே தான் கட்டப்பட்டன. தமிழகத்தில் இதே காலப் பகுதியில் நிலைபெற்றிருந்த இந்துக் கோயில்களைப் பற்றிச் சங்க நூல்கள் விரித்தாலுங்கூட, இவையாவும் அழிந்து விட்டதுமல்லாமல் அவை நிலைபெற்றிருந்ததை உறுதிப்படுத்தத் தொல்பொருளியற் சான்றுகள் கூடக் கிடைக்காமல் இருக்கும் நிலையையும் இச் சந்தர்ப்பத்தில் எண்ணுதல் பொருத்தமுடைத்தாகும். இந்தியாவைப் போன்று இலங்கையிலும் முதல் முதல் அழிவற்ற பொருட்களைக்கொண்டு வழிபாட்டு ஸ்தலங்களை அமைத்த மதம் பௌத்த மதமே. எனவே

ஆதி இந்துமதம் பற்றி எமது ஆய்வு பெரும்பாலும் கல்வெட்டுக்களிலே காணப்படும் பெயர்ப்பட்டியல் ஆய்விலும், இலக்கியச் சான்றுகள் ஆங்காங்கே செப்பும் ஒருசில செய்திகளிலும் மட்டுமே தங்கி விடுகிறது என்பது ஈண்டு நோக்கற்பாலது. இந்து மதம் என்று குறிப்பிடும்போது இந்து மதத்தில் வணங்கப்பட்ட வைதீகக் கடவுளர் தொட்டுக் கிராமியக் கடவுளர் வரையும் பொதுமக்கள் வழிபாடுகள் ஆகியனவற்றையும் மனதிற் கொண்டுதான் எமது ஆய்வு தொடருகிறது.

இந்நாட்டுக்குப் பௌத்த மதம் கி. மு. 3ம் நூற்றுண்டில் வருமுன் இங்கு ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட கட்டுப்பாடுள்ள மதமொன்று இருக்கவில்லை எனப் பௌத்த வரலாற்று நூல்கள்[2] கூறுகின்றன. சீன யாத்திரிகளுன குவான் சுங்கும்[3] ''முற்காலத்தில் சிங்கள அரசில் தவறுன சமய வழிபாடு 'நிலவியது'' என்கிறுர். கி. பி. 7ம் நூற்றுண்டில் இந்தியா வந்து தென் இந்தியாவில் காஞ்சி வரை வந்தும் இலங்கை வராத இச் சீன யாத்திரிகன் குறிக்கும் தவறுன வழிபாடு யாது? இக்காலம் தென்னகத்தில் பௌத்த-இந்துமதப் பூசல்கள் நிலவிய காலமாகும். எனவே இச் சந்தர்ப்பத்தில் இவர் குறிப்பிடும் தவறுன வழிபாட்டு முறை இந்து மதத்தையே குறிக்கிறது என்று கொண்டால் பிழையாகாது. அக்காலத்தில் தமிழ் நாட்டில் காஞ்சி தலைசிறந்த பௌத்த கல்விப் பீடங்களில் ஒன்றுக அமைந்திருந்ததுவும் இலங்கைக் குருமார்கள் அடிக்கடி இங்கு சென்று சமய அறிவைப் பெருக்குவதில் ஈடுபட்டிருந்தமையை நோக்கும்போதும் இந்நாட்டில் நிலவிய சமய நிலையை இவர்கள்மூலம் சீனயாத்திரிகன் அறிந்திருந்தான் என்று கொள்ளுதல் உசிதமாக அமைகிறது. இங்கு பௌத்தம் வருமுன்பே பல நூற்றுண்டுகட்கு முன்பு வந்த வந்தேறு குடிகளாகிய திராவிடரும், ஆரியரும் இந்துமத வாழ்க்கை முறை, சமய நிறுவனங்கள், கோட்பாடுகள், வழிபாட்டு முறைகள் ஆகியனவற்றை இந்நாட்டில் புகுத்தினர் எனக் கொள்ளலாம். இதனுல் பௌத்தம் இங்கு வரமுன்பே, இவை இந்நாட்டில் வேரூன்றி விட்டன எனவும் கொள்ளலாம். இந்நிலையைத்தான் இராமாயணம், மகாபாரதம், ஸ்கந்தபுராணம் போன்ற நூல்களில் இலங்கை பற்றி வரும் குறிப்புக்களும் உறுதிப்படுத்துகின்றன. இவற்றை மனதிற் கொண்டுதான் கீழைத்தேய கலாச்சார வித்தகரான சேர் வில்லியம் ஜோன்சும்[4] தொன்மைக்காலந் தொட்டு இந்நாட்டில் இந்துக்கள் வாழ்ந்து வந்தனர் என்று குறிப்பிடுகிறுர்.

இலங்கையின் ஆதி வரலாற்றை நோக்கும்போது இக்கால அரசியல், சமூகத் துறையில் பிராமண வகுப்பினர் பெற்ற முக்கியத்துவம் சிறப்பாகக் காணப்படுகிறது.[5] கல்வெட்டுக்களின் பல இடங்களிலும் இவர்கள் ''பமண'' என விளிக்கப்படுகின்றனர். ஆதி இந்திய இலங்கை அரச அமைப்புக்களில் புரோகிதர் ஒரு செல்வாக்கான ஸ்தானத்தை அரண்மனையிற் பெற்றிருந்தார். பிராமணர் நிர்வாகிகளாகவும் நல்லாசிரியர்களாகவும் காணப்படுகின்றனர். கல்வெட்டுக்களில் சில இடங்களில் பிராமணர் ''படகே'' எனவும் அழைக்கப்படுகின்றனர். காரணம் இவர்கள் வேத பாராயனத்தில் கைதேர்ந்து இருந்ததோடு கற்பித்தல் போன்ற தொழில்களிலும் ஈடுபட்டிருந்தமையே ஆகும். இக்காலத்தில் வேள்விகளும் சமயத்தில் பெற்ற முக்கியத்துவத்தினைக் கல்வெட்டுக்களில் வரும் ''யாகதநக'' போன்ற பெயர்கள் சுட்டிக் காட்டுகின்றன. ''பாண்டுக்காபயன்'' காலந்தொட்டு பிராமணர் பெற்றுவந்த செல்வாக்கினை மகாவம்சம் விரிக்கிறது. இம் மன்னன் அனுராதபுர நகரத்தை நிருமானித்தபோது மந்திரங்களைச் செபிப்பதற்கென விசேடமான கட்டிடங்களை நிருமானித்தான்.[6] இம்மந்திரங்கள் செபிக்கப்பட்ட இடம் இந்து வழிபாட்டோடு சம்பந்தப்பட்ட இடங்களே என்பதுவும் ஈண்டு குறிப்பிடத் தக்கது. இலங்கையில் அரச

மரம் நாட்டப்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்ட அதிவிசேட பிரமுகர்களில் பிராமணனை திவங்க[7] குறிப்பிடப்படுகிறார். இவர் வாழ்ந்த கிராமம் அரசமரக் கிளைகள் நாட்டப் படுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டு இடங்களில் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது[8]. இக்குறிப்புக்கள் பௌத்த மதத்தில் படிப்படியாகப் பிராமணர் எவ்விதம் சேர்க்கப்பட்டனர் என்பதை வெளிக்காட்டுகின்றன. பௌத்தம் இந் நாட்டில் அரச ஆதரவைப்பெறத் தொடங்கப் பிராமணர் அரசியல் சமூகத் துறை களிற் பெற்ற செல்வாக்கும் முக்கியத்துவமும் படிப்படியாகக் குறையத் தொடங் கின எனலாம். பௌத்த மதத்தைத் தழுவிய பிராமண வகுப்பினர் தமது முன் னைய குலத் தொழில்களைவிட்டு, பல புதிய தொழில்களில் ஈடுபடத் தொடங்கினர்.

நாட்டில் பிராமண வகுப்பினர் வகித்த முக்கிய இடம் அக்காலத்தில் இந்து மதம் பெற்றிருந்த சிறப்பான இடத்தை எம் கண்முன்னே கொண்டு நிறுத்துகிறது. இக்காலத்தில் சைவம் பெற்றிருந்த சிறப்பும் கல்வெட்டுக்களில் பல இடங்களில் பேசப்படுகிறது. ''சிவ''[9] என்ற சொல் பல இடங்களில் காணப்படுகிறது. செம்மை சிறந்தவன், சிவந்த மேனியன் என்ற பொருளிலமைந்த இச்சொல் ஒரு திராவிடச் சொல்லென சுனித்குமார் சட்டர்ஜி அவர்கள் கருதுகிறார்கள். ''சிவகூட'', ''சிவரக்கித'' போன்ற சிறப்புப் பெயர்களும் சிவனால் பாது காக்கப்படுபவர்கள் என்ற பொருளிலமைந்து இக் கல்வெட்டுக்களில் காணப்படு கின்றன. சமகால இந்திய பௌத்த ஸ்தலமாகிய பாறூற்றில் அமைந்த கல் வெட்டுக்களிலும் ''சிவதாஸ'' ''சிவபாலித'' போன்ற பதங்கள் காணப்படுவதும் ஈண்டு நினைவு கூரற்பாலது. பிராமிக் கல்வெட்டொன்றில் ''விஸ்வதேவ''[10] என்ற சொல் வருகிறது. இது பெரும்பாலும் தேவர்களில் முதன்மை பெற்ற முழுமுதற் கடவுளாகிய சிவனைக் குறித்தது என்று கொண்டால் பிழையாகாது. மகாவம்சம் ஆதி இலங்கை மன்னர் பெயர்ப்பட்டியலில் கிரிகண்ட சிவ, மூத்த சிவ, மகா சிவ போன்ற பெயர்களைக் குறிப்பிடுதலை நோக்கும்போது இவர்கள் சைவர்களாக இருந்திருக்கலாம் என எண்ணத் தூண்டுகிறது. ''நாடிக'' ''வசப'' போன்ற பதங் கள் சிவனது வாகனமாகிய நந்தியை நினைவூட்டுகின்றன. சிவனது இருப்பிடமாகிய கைலாசமலை கூட இக் கல்வெட்டுக்களில் ''கேலச'' என விளிக்கப்படுகிறது.

இலங்கையின் பௌத்தமத வரலாறு எழுதிய வண. ராகுல[11] அவர்கள் சமந்த கூட எனப் பாளிமொழி இலக்கியங்களில் பேசப்படும் சிவனொளிபாதமலை யில் அமைந்திருந்த சமன் கடவுள், பௌத்தம் இந்நாட்டிற்குக் கால் வைக்க முன்பே இங்கு நிலவிய கடவுள் என்கிறார். புத்தபிரான் இந்நாட்டின்மீது மேற் கொண்ட தமது முதலாவது விஜயத்தின்போது இக் கடவுளைப் பௌத்த மதத் துக்கு மாற்றியதாகவும் பௌத்த நூல்கள் கூறுகின்றன. இதனால் இது ஒரு இந்துத் தெய்வம் என்பது பெறப்படுகிறது. பல இந்துக்கடவுளர் பௌத்த செல்வாக்குக்கு உட்பட்டுப் புதுப்பெயர் கொண்ட கடவுள்களாக மாறியதைப் பௌத்தமத வர லாறு எமக்கு எடுத்துக்காட்டுகிறது. இவ்விதமே இந்துமதக் கடவுளாகிய அழித்தல் தொழிலைக் கொண்ட சிவனும் பௌத்த மதத்தில் சமனாகி (யமன்) வணங்கப்பட் டான் என்று கூறுதல் பொருத்தமுடையதாகக் காணப்படுகிறது. மலையுறைத் தெய்வமாகிய சிவனின் பாதங்கள் கொண்ட இம்மலையை கிரேக்க அறிஞரும் ''ஒளிபத'' என அழைத்தது ஈண்டு நினைவு கூரற்பாலது.

மகாவம்சம்[12] பாண்டுக்காபயன் அநுராதபுரத்தில் சிவிகாசாலா, சோதிசாலா ஆகிய கட்டிடங்களை நிருமாணித்தான் எனக் கூறுகிறது. மகாவம்சத்தின் உரைநூலாகிய மகாவம்சரிகா[13] சோதிசாலா என்பது ஒன்றில் பிராமணர்கள்

சோதிவசனப் பாராயணம் செய்த இடம் அல்லது வைத்தியசாலை என விளக்கம் தருகிறது. பேராசிரியர் பரணவித்தானா[14] அவர்கள் இக்கட்டிடம் ஏனைய சமயக் கட்டிடங்களோடு சேர்த்து விளிக்கப்படுவதால் இதை ஒரு வைத்தியசாலை எனக் கொள்ளுவதிலும் பார்க்க ஒரு சமயக் கட்டிடம் எனக் கொள்ளுதல் பொருத்தமானது என அபிப்பிராயப்படுகிறார். எனவே இதையும் சைவ சமயத்தோடு சம்பந்தமான கிரிகைகள் நடந்த இடம் எனக் கொண்டால் பிழையாகாது. சிவிகா சாலாவைப் பற்றிப் பேசவந்த மகாவம்ச ரீகா[15] இது ஒரு லிங்கம் வைத்து வணங்கப்பட்ட இடமாக அல்லது ஒய்வகமாக இருந்திருக்கலாம் எனப் பொருள்பட விளக்கம் தருகிறது, மேற்கூறிய செய்திகள் பாண்டுக்காபயன் காலத்திலிருந்து நிலவி வந்த சிவலிங்க வழிபாடு இந்நாட்டின் பழைய வழிபாடாக இருந்ததை எடுத்துக் காட்டுகின்றன. கி. பி. 4ம் நூற்றுண்டில் வாழ்ந்த மகாசேன மன்னன் இந்நாட்டிலமைந்த லிங்க ஸ்தலங்களைத் தரைமட்டமாக்கிய செய்தியை மகாவம்ச ரீகா[16] கூறுவதை நோக்கும்போது இவ்வழிபாடு செல்வாக்குப்பெற்ற வழிபாடாகத் தொடர்ந்து வளர்ந்துவந்தது என்பதுவும் தெளிவாகிறது. இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முற்பட்ட காலத்திலிருந்தே சிவ – லிங்கவழிபாடுகள் இந்திய சிந்துவெளி நாகரிகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதை அங்கு கண்டெடுக்கப்பட்ட சிவனின் சிலைகளும் ஏனைய லிங்கங்களும், உறுதிப்படுத்துகின்றன.[17]

ஆதி இலங்கையில் முருக வணக்கமும் மிகப்பழமையானது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் கல்வெட்டுக்களில் வரும் முருகனது வேலைக் குறிக்கும் ''வேலு''[18] என்ற சிறப்புப் பெயர் காணப்படுகிறது. வேல் வழிபாடு மிகவும் தொன்மை படைத்தது. தமிழ்நாட்டில் ஆதிச்ச நல்லூர்[19] என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பழந்தமிழர் பண்பாடாகிய பெருங் கற்காலப் பண்பாட்டைச்சேர்ந்த தொல்பொருட் சான்றுகளில் முருகனது வேலும் காணப்படுவது இங்கு நினைவு கூரற்பாலது. இதன் காலம் கி. மு. 1200 ஆண்டாக இருக்கலாம் என அறிஞர் கருதுகின்றனர். இலங்கையிலும் பெருங் கற்காலப் பண்பாடு இந்நாட்டின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பரவியிருந்தது என்பதைப் புத்தளமாவட்டத்திலுள்ள பொம்பரிப்பு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி முடிபுகள் எடுத்துக்காட்டுகின்றன. இதற்கும் ஆதிச்ச நல்லூர்க் கலாசாரத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது. எனவே பொம்பரிப்பு ஆராய்ச்சியை விரிவுபடுத்தினல் ஆதிச்ச நல்லூரில் முருகன் வணக்கத்துக்குரிய சான்றுகள் கிடைப்பது போல் இங்கும் கிடைக்கலாம். முருகவணக்கத்தின் ஆரம்பம் முதலில் வேல் வழிபாட்டில் ஆரம்பித்துக் காலகதியில் இவ்வேல் முருகனது ஆயுதமாக மாறி வழிபடப்பட்டது எனலாம். பிராமிக் கல்வெட்டுக்களில் ''வேலு'' ''வேலுச'' [20] போன்ற குறிப்புக்கள் காணப்படுகின்றன. இலங்கையிலும் கதிர்காமம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே முருக வழிபாட்டோடு தொடர்புடைய இடம் என்பதை மரபு வழிக்கதைகள் எதிரொலிக்கின்றன. அத்தோடு முருகனது ஏனைய அம்சங்களான ''விசாக'' ''குமார'' ''மகாசேனபதி'' போன்றனவும் கல்வெட்டுப் பெயர்களில் காணப்படுகின்றன. இந்தியாவிலும் குஷானியருடைய நாணயங்களில் மேற்கூறப்பட்ட பெயர்கள் காணப்படுவதும் நோக்கற்பாலது.

சிவ, முருக வழிபாட்டைக் குறிக்கும் பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுவது போன்று விநாயக வணக்கத்தைக் குறிக்கும் பெயர்கள் இங்கே குறிப்பிடப் படாமை கவனிக்கற்பாலது. இவ்வழிபாடு பிற்பட்ட கால வழிபாடாக எழுச்சி பெற்றதுதான் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று கொண்டாலும் கூட, இலங்கையில் கி. மு. 1ம் நூற்றுண்டைச் சேர்ந்த மிகுந்தலையிலுள்ள கண்டாக

சைத்தியத்திலுள்ள21 கணங்களில் சிற்பங்கள் இதன் தொன்மையை எடுத்துக் காட்டுகின்றன. இக்கணங்களில் ஒன்று யானைமுகத்தையுடைய கணமாகக் காணப்படுகிறது. இவ் யானைமுகக் கணத்தைச் சூழ ஏனைய கணங்கள் கைகளில் பல்வகைப் பொருள்களுடன் காட்சி தருவதை நோக்கும்போது இக்கணம் யானைமுகக் கடவுள் தான் என்று எண்ணத் தோன்றுகிறது. பேராசிரியர் எல்லாவெலவும் இவ்வாறே கருதுகிறார். ஆந்திர நாட்டில் கி. பி. 2ம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பங்களில் மேற்கூறிய சிற்பங்கள் அமராவதிக் கலையில் காணப்படுகின்றன. கண்டாக சைத்தியம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தாலும் கூட இச் சிற்பங்கள் பிற்காலத்தில் இச் சைத்தியத்தில் அலங்காரப் பொருட்களாகச் சேர்க்கப்பட்டன எனக் கொண்டால் பிழையாகாது. இலங்கையின் சிற்பக்கலை வளர்ச்சியிலும் திராவிடக் கலைக் கூடத்தைச் சேர்ந்த ஆந்திரச் சிற்பிகள் முக்கிய பங்கினை நோக்கும் போதும், மேற்கூறிய யானைமுகக் கடவுளின் சிற்பம் கி. பி. 2ம் நூற்றாண்டைச் சேர்ந்திருக்கலாம் எனக் கொள்ளலாம். இச் சிற்பத்தை ஆந்திரக் கலைஞர்கள் தம் நாட்டிலிருந்து இங்கு கொண்டுவந்திருக்கலாம் அல்லது இங்கேயே இதையும் வடித்தெடுத்திருக்கலாம் எனவும் தோன்றுகிறது. ஏனெனில் இலங்கையில் தோன்றிய முதல் புத்தரது உருவச் சிலைகள் சில ஆந்திர நாட்டிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டன, சில இங்கேயே ஆந்திரக் கலைஞர்களால் வடித்தெடுக்கப்பட்டன, இதனை மனதிற் கொண்டுதான் யானைமுகக் கடவுளினது சிலை பற்றிய அனுமானமும் அமைகிறது. வடமேற்கு இந்தியாவில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே யானைமுகக் கடவுள் வழிபாடு வழக்காற்றில் இருந்தது என்பதை அங்கு கண்டெடுக்கப்பட்ட சிற்பங்களும் நாணய இலட்சினைகளும் எடுத்துக்காட்டுகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இவ்வழிபாடு சிலப்பதிகார காலத்திலேயே[22] வழக்கில் இருந்தது என்று சிலர் கருதுகின்றனர்.

வைதீக மதக் கடவுளாகிய பிரமனும் ஒருகால் இங்கே வழிபடப்பட்டான் என்பதையும் கல்வெட்டுக்களில் வரும் பெயர்கள் வெளிக்காட்டுகின்றன. ''பம'' ''பமதாஸ'' போன்றனவே இவையாகும். காளி, துர்க்கை ஆகிய பெண் தெய்வங்களின் வழிபாடு இங்கே காணப்பட்டது. அக்கினி (''அகிதத்த'', ''அகிபூதி''), இந்திரன் (''இட'', ''இடபூதி''), மித்ர (''மித்ரபால'', ''மித்ரகூட''), சோம (''சோமதத்த'', ''சோமதேவ''), சூரியன் (''சுரிகுட''), வருணன் (''வருணதத்த'') ஆகிய வேதகாலக் கடவுளர்களும் வழிபடப்பட்டு வந்தமையைக் கல்வெட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. இன்றுபோன்று அன்றைய இந்துக்களும் பிள்ளைகள் பிறக்கும் போது அவர்கள் பிறந்த நட்சத்திரத்தைக் கொண்டே அவர்களுக்குப் பெயரிடும் வழக்காற்றைப் பேணி வந்தனர் என்பதையும் இவற்றிலே காணப்படும் ''விசாக'' ''ரேவதா'' ''பரணி'' ''சித்ரா'' போன்ற நட்சத்திரங்களின் பெயர்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

வைஷ்ணவ வழிபாடு பற்றிய சான்றுகளையும் பிராமிக் கல்வெட்டுக்கள் தருகின்றன. ஒரு கல்வெட்டில் ''பத வாசுதேவ''[23] என்ற வசனம் வருகிறது. இவ் வசனம் இதே காலத்தைச் சேர்ந்த வட இந்தியாவிலுள்ள விதிசாவிலுள்ள கெலியோடோறஸ் கம்பக் கல்வெட்டில் வரும் வரிகளை நினைவூட்டுகிறது. இதில் கெலியோடோறஸ் என்ற கிரேக்கன் தன்னையும் விஷ்ணு பக்தன் என அழைக்கிறான். விஷ்ணுவின் பல்வகை அவதாரங்களையும் இக்காலத்தைய மக்கள் அறிந்திருந்ததை இக் கல்வெட்டுக்களில் வரும் பெயர்கள் கூறுகின்றன. விஷ்ணு இவற்றில் ''விணு'' என விளிக்கப்படுகிறார். இச் சொல் தமிழில் மூங்கிலைக் குறிக்கும் 'வேணு' என்ற அடியி

லிருந்து பிறந்திருக்கலாம். விஷ்ணுவும் வேணுகானனே. கல்வெட்டுக்களில் வரும் ''கணகுட்டச'', ''கணதத'',[24] ''கணதாசிகய'' எனவரும் பெயர்களும் கன்ன வழிபாடு உடையவர்கள் இருந்தனர் என்பதைக் காட்டுகின்றன. ''கோபால'' ''ராம'' 'நாராயண'' ஆகியவை இக்கல்வெட்டுக்களில் காணப்படும் ஏனைய விஷ்ணுவின் அம்சங்களாகும். ஆதி இலங்கையில் நிலவிய விஷ்ணு வழிபாட்டைக் குறிகாட்டும் பதிகளுள் வல்லிபுரம், தொந்தருமுனை ஆகிய இடங்களிலமைந்த விஷ்ணு ஆலயங்களை இங்கே குறிப்பிடலாம்.

ஆதி இலங்கையில் வழக்காற்றிலிருந்த நாக, யக்ஷ வழிபாடுகள் பற்றி இலக்கிய நூல்கள் கூறுகின்றன. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் நாகர், யக்ஷர் எனப்பட்டோர் ''ஓஸ்ரலோயிட்'' இனத்தைச்சேர்ந்த இந்நாடுகளின் பூர்வீக குடிகளாகும். இவர்கள் கலாசாரத்தின் சில அம்சங்களை, இவர்கள் மீது தமது கலாச்சாரத்தைத் திணித்து இவர்களை வென்ற திராவிட, ஆரிய கலாசாரங்கள், பெற்றன என்பதை இந்தியா–இலங்கை வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவற்றில் ஒன்று நாக வழிபாடாகும். இந்தியாவைப் போன்று இங்கும் பௌத்த மதம் பரவமுன்பே நாகவழிபாடு வியாபித்திருந்தது. காலகதியில் இவ்வழிபாடு வைதீக இந்துமத வழிபாட்டிலும், பௌத்த வழிபாட்டிலும் சேர்க்கப்பட்டது. இந்நாடுகளின் பௌத்தகலைச் சின்னங்களில் காணப்படும் நாக வழிபாட்டுச் சின்னங்கள் பௌத்த வெள்ளத்தில் அமிழ்ந்திய நாகவழிபாட்டின் எச்சங்களாகும். பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் ''நாக''[25] ''நாகபிதக'' ''நாகதத்க'' போன்ற பெயர்கள் நாக வழிபாட்டைப் பேணியோர் பெயர்களேயாகும். இலங்கையின் வடபகுதி ஒருகால் நாகவழிபாடு சிறப்புப் பெற்ற இடமாக இருந்தது என்பதனை இவ்வழிபாட்டின் சின்னங்களாகிய நயினை நாகபூஷணி அம்மன் கோவிலும், நாகர் கோயிலும், கிராமங்களில் காணப்படும் நாகதம்பிரான் கோயில்களும் எடுத்துக்காட்டுகின்றன. இன்றும் இந்துக்கள் மத்தியில் வழக்காற்றில் இருக்கும் நாகலிங்கம், நாகமுத்து நாகமணி, நாகராஜா போன்ற பெயர்கள் இவ்வழிபாட்டின் தொன்மையையும் தொடர்ச்சியையும் நினைவூட்டுகின்றன.

இலங்கையின் பூர்வீக குடிகளின் வழக்காற்றிலிருந்த மற்றைய வழிபாடு யக்ஷ வழிபாடாகும். யக்ஷ வழிபாடு ஒருவகை இறந்தோர் வழிபாடு எனலாம். உலகின் பல பகுதிகளிலும் தலைசிறந்த இறந்தோரின் நினைவாக உருவம் அமைத்து அவர்களை வழிபடும் மரபு வியாபித்திருந்தது. சங்க நூல்கள் பேசும் நடுகல் வழிபாடும் இதன் அடிப்படையில்தான் அமைந்தது போலும். கிறிஸ்துவின் முற்பட்ட காலத்தைச் சேர்ந்த பல பெரிய யக்ஷ, யக்ஷியர் சிலைகள் வட இந்தியாவின் பல பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆதி இந்திய பௌத்த கட்டிடக் கலைக் கூடங்களான பாறூட், சாஞ்சி ஆகிய இடங்களில் பல யக்ஷ, யக்ஷியர் உருவங்கள் காணப்படுவதும் ஈண்டு நோக்கற்பாலது. இவற்றைப்போன்ற பெரிய யக்ஷ உருவங்கள் இந்நாட்டுப் பௌத்த கட்டிடக் கலையில் காணப்படாவிட்டாலும் கூட, இங்கு காணப்படும் குறுகிய யக்ஷ உருவங்கள் இந்நாட்டில் ஊன்றியிருந்த யக்ஷ வழிபாட்டிற்குச் சிறந்த உரைகற்களாகும். மகாவம்சம் பல யக்ஷக் கடவுளர்களைக் கூறுகிறது. காலவேல[26], சித்தராஜ[27], மகேஜ[28] ஆகியோர் இவர்களிற் குறிப்பிடத்தக்கவர்களாகும். வியாததேவ[29], கம்மாரதேவ[30] ஆகியவை தனித்தனி வினைஞர் கூட்டங்களின் தெய்வங்களாகும். புரதேவ[31] அநுராதபுர நகரத்தின் காவல் தெய்வமாகும். இவற்றோடு மர வணக்கமும் முக்கிய இடத்தைப் பெற்றது. இவற்றுள் ஆலமரம் குறிப்பிடத்தக்கது.

இச்சந்தர்ப்பத்தில் இக் கல்வெட்டுக்களில் காணப்படும் சுமார் 45 வரையிலான பிராமி எழுத்து வகையைச் சாராத குறியீடுகள் பற்றி ஆராய்வது பொருத்தமானதாகும். இவற்றின் முக்கியம் பற்றிப் பேராசிரியர் பரணவித்தான அவர்கள் ''இலங்கையின் பிராமிக் கல்வெட்டுக்கள்''[32] என்ற தமது வெளியீட்டில் ஆராய்ந்துள்ளார். அவர் கருத்துப்படி இக்குறியீடுகள் கல்வெட்டுச் செய்திகளை வாசிக்க உதவியாக இருப்பதோடு பிராமிக் கல்வெட்டுக்கள் கூறும் விடயங்களுக்கும் இவற்றுக்கு மிடையே முழு ஒற்றுமையும் உளதாகும். ஆனல் இவற்றைச் சற்றுவிரிவாக நோக்கும்போது இவை வேறு பல அம்சங்களைப் பிரதிபலிக்கின்றன என எண்ணத் தோன்றுகிறது. உதாரணமாக பரமக வடிகா (156) என்பவரது கல்வெட்டில் நந்திபதம், திரிசூலம் ஆகியனவற்றின் குறியீடுகள் காணப்படுகின்றன. இவை இந்து மதச் சின்னங்களாகும். பௌத்த மதச் சார்புடைய இக்கல்வெட்டுக்களில் இவை குறிக்கப்பட்டதன் நோக்கம் என்ன? ஒரு சமயம் இவை இக் கல்வெட்டைக் கொடுத்தவரின் வழிபாட்டு முறையைக் கூறி இக் கல்வெட்டில் சொல்லப்பட்ட விடயங்கள் நிலைத்து நிற்பதற்கு அவர் தமது வழிபாட்டு இலட்சனைகளைச் சாட்சியாக இட்டதையும் குறிக்கலாம். இல்லாவிட்டால் கல்வெட்டுக்குரியவர் பௌத்தராக மாறியபின்பும் பழகிய தமது பழைய வழிபாட்டு இலட்சினைகளைப் பொறித்ததையும் எடுத்துக் கூறலாம். மீன் குறியீடு விஷ்ணுவின் மற்சய அவதாரத்தையும், உடுக்கு சிவனின் உடுக்கையும் குறிக்கலாம். சக்கரம், சுவஸ்திகா ஆகியவை இந்து பௌத்த மதங்களுக்குரிய பொதுச்சின்னங்களாகும். மேற்கூறிய உதாரணங்கள் சமயச் சார்புடைய இக்குறியீடுகள் பல இந்துமத அம்சங்கள் கொண்டும் காணப்படுகின்றன என்பதனை எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன் அச்சுக் குத்தப்பட்ட ஆதி இந்திய நாணயங்களிலும், தென் இந்திய பெருங்கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்த மட்கலன்களிலும்[33] வரும் குறியீடுகள் பல இப் பிராமிக் கல்வெட்டுகளில் வரும் குறியீடுகளோடு ஒத்துக் காணப்படுகின்றன என்பதுவும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. எனவே இவற்றின் ஒப்பியல் ஆய்வு இக்காலத்தைய சமயம் பற்றிய பல புதிர்களை நிச்சயம் வெளிக்காட்டும்.

மேற் குறிப்பிட்ட மேலாய்வு ஆதி இலங்கை மதவரலாற்றின் பல கட்டங்களைப் பிரதிபலிக்கின்றது எனலாம். முதலாவதாக இலங்கையின் பூர்வீக குடிகளான நாகர், யக்ஷர் ஆகியோர் கடைப்பிடித்த வழிபாட்டு முறைகள், இரண்டாவதாக மேற்கூறிய வழிபாட்டை தன் வழிபாட்டோடு இணைத்த வைதீக இந்துமத வழிபாடு, மூன்ருவதாக இவற்றையெல்லாம் காலோட்டத்தில் முன்னர் வளர்ந்து வந்த பௌத்த வழிபாட்டு முறைகள், இங்கு பௌத்த மதத்துக்குக் கிடைத்த அரச ஆதரவு, பௌத்த குருமாரின் விடாமுயற்சி, இந்து பௌத்த மதங்களுக்கிடையே நிலவிய ஒற்றுமை இலங்கையில் பௌத்த மதத்தின் கையை மேலோங்க வைத்தாலுங்கூட, இன்றும் பௌத்த வழிபாட்டில் இந்துக்கடவுளர் பெறும் இடமும் அவர்கள் பல புதுப்பெயர்கள்கொண்டு வழிபடப்படும் விதமும், இந்து மத அனுஷ்டானங்கள் பல பௌத்த சமுதாயத்தில் வேரூன்றிக் காணப்படுவதுவும், இந்நாட்டின் இந்துமதத்தின் தொன்மைக்கும், அதன் தொடர்ச்சியான வரலாற்றுக்கும் சிறந்த உரைகற்களாகும்.

## அடிக் குறிப்புக்கள்


1. Paranavitana, S. **Inscriptions of Ceylon**, Vol. I (Colombo 1970) pp I—XIII
2. Rahula, Walpola. **History of Buddhism in Ceylon** First edition, (Colombo 1956 p. 34)

3. Hiuen Tsiang BK XI p 246
4. CLR Part I p 63
5. Ellawalla, H., **Social History of Early Ceylon** Ch. 2 pp 11—17
6. MV Ch. X V 20—24
7. MV XIX V 33
8. MV XIX V 60
9. CJSG II p 203 No. 618
   CJSG II p 202 No. 615
   CJSG II p 203 No. 619
   CJSG II p 211 No. 653
10. JRAS (CB) New Series Vol. II p. 130 No. 12
11. Rahula Walpola. **History of Buddhism in Ceylon** First edition (Colombo 1956) p. 41
12. MV XV 102
13. MVT p 296
14. JRAS (CB) Vol. XXXI No, 82 pp 302—327
15. MVT p 296
16. MVT p 502
17. Marshall, Sir John, **Mohenjo - Daro and the Indus Civilization** (3 Vol). Lond. 1931
18. Paranavitana. S. (ed.) **Inscriptions of Ceylon** Vol. I (Colombo 1970) In. No. 123, 169, 612, 979
19. Nilakanta Sastri, **History of India** (Oxford 1966) p 57
20. Paranavitana, S. **Inscription of Ceylon** Vol. I (Colombo 1970) In No. 121, 355, 647
21. ASCAR 1935
22. Silap. XXVIII; 147, 148.
23. CJSG, II. No. 427 p 107
24. Paranavitana, S. op. cit. In Nos. 531, 532, 651, 748, 749
25. Paranavitana, S. op cit. In. Nos. 120, 507, 1007, 1207
26. MV XXXVII 44
27. MV X 84
28. MV X 90
29. MV X V 89
30. **Mahabodhivamsa**, p. 136
31. MV XXV V 87
32. See Paranavitana p. XXVI
33. Lal B. B. "From Megaliths to the Harappa" **Ancient India**, No. 16. 1960